உ



# நல்லைக் கந்தன்
# பஜனைப் பாடல்கள்

வெளியிடுவோர் :

**மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார்**

ஆக்கியோன் :

(அளவையூர் சஞ்சீவி) அருட்கவி, சீ. வி.

# செல்வக் கந்தன்

ஓங்குமறை யாகமம் பாங்குமிக உலகெலாம்
உதயமாய் வந்த முருகா
உமைதழுவ ஈராறு கைகளுடன் ஆறுமுக
உருவாகி வந்த செல்வா
ஏங்குபல வானவரின் இன்னலைத் தீர்த்தசூரர்
ஈடழியச் செய்த வீரா
ஏறுமயில் வாகனா ஆறுபடை நாயகா
இன்பவடி வான குமரா
காங்கேய சண்முகா கார்த்திகே யாகுகா
கணபதிக் கிளைய சிறுவா
கந்தா கடம்பணியும் கருணாக ராஎமைக்
கைதூக்கி யாள வருவாய்
தேங்குபுகழ் வேலேந்தித் தெய்வகுஞ் சரிவள்ளி
திருமருங் கழகு செய்யச்
சித்திரப் பொற்பதும ரத்னரத மேறிவரும்
செல்வ நல்லூர்க் கந்தனே.

# நல்லைக் கந்தன் பிள்ளைத் தமிழ்

குமரா வருக சிவஞானக்
குன்றே வருக ஆறுமுகக்
கோவே வருக அழகுவளர்
குகனே வருக கொடைமிகுந்த
உமையாள் மகனே வருகஅருள்
உருவே வருக உலகமெலாம்
உடையாய் வருக உறிதிருடி
உண்டோன் மருகா வருகநெடுஞ்
சமரா யுதனே வருகமறைத்
தலைவா குஞ்சரி குறவள்ளி
தழுவும் செல்வா வருகதமிழ்ச்
சங்கப் புலவா மயிலேறும்
நமதா ருயிரே வருகமலர்
நலமார் பழமுதிர் சோலைதிகழ்
நல்லைக் கந்தா வருககுரு
நாதா வருக வருகவே.

# கூட்டுப் பிரார்த்தனை

## கணபதி

ஜெய ஜெய கணபதி ஓம் கணபதி ஓம்
ஜெய ஜெய கணபதி ஓம் கணபதி ஓம்

| | | | | |
|---|---|---|---|---|
| பிரணவ நாதா | ஓம் | கணபதி | ஓம் | |
| பேரருளாளா | ,, | ,, | ,, | |
| அரகர முதல்வா | ,, | ,, | ,, | |
| அம்பிகை பாலா | ,, | ,, | ,, | (ஜெய) |
| ஞானக் கொழுந்தே | ,, | ,, | ,, | |
| நந்தியின் மைந்தா | ,, | ,, | ,, | |
| வானவர் மணியே | ,, | ,, | ,, | |
| மனமணி விளக்கே | ,, | ,, | ,, | (ஜெய) |

| | | | | |
|---|---|---|---|---|
| அங்குச பாசா | ஓம் | கணபதி | ஓம் | |
| அன்பரின் நேசா | ,, | ,, | ,, | |
| துங்கக் கணேசா | ,, | ,, | ,, | |
| சுடர்ப் பிரகாசா | ,, | ,, | ,, | (ஜெய) |
| வேத சொரூபா | ,, | ,, | ,, | |
| விக்கின ராசா | ,, | ,, | ,, | |
| சோதி நலம்தரும் | ,, | ,, | ,, | |
| தும்பியின் முகனே | ,, | ,, | ,, | (ஜெய) |

## நடராசர்

நடராசா சிவ நடராசா
ஞான தயாபர நடராசா

| | | |
|---|---|---|
| சிவசிவ சிவசிவ | நடராசா | |
| தில்லையில் ஆடும் | ,, | |
| பவவினை தீர்க்கும் | ,, | |
| பார்வதி பாகா | ,, | (நட) 1 |

கவலைகள் தீர்க்கும் நடராசா
கைலையில் மேவிய ,,
தவநெறி காட்டும் ,,
சந்திர சேகர ,, (நட) 2

அம்பிகை பாகா ,,
அருளும் தியாகா ,,
உம்பரு மறியா ,,
ஓமெனும் பொருளே ,, (நட) 3

நமசி வயப்பொருள் ,,
ஞான நடம்புரி ,,
அமிர்த கடேசா ,,
ஆகம ரூபா ,, (நட) 4

செல்வ சுகந்தரும் ,,
கல்வீ நலந்தரும் ,,
நல்வர மருளும் ,,
செல்வ சிதம்பர ,, (நட) 5

## ஓம் சக்தி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சிவ சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சிவ சக்தி ஓம்

ஆதிப ராபரி — ஓம் சிவ சக்தி ஓம்
அம்பிகை சுந்தரி — ,,
சோதி சொரூபிணி — ,,
துரிய நடேஸ்வரி — ,, (ஓம்) 1

சந்திர வதனி — ,,
சாந்த சரோஜினி — ,,
மந்திர காரணி — ,,
மரகத ரஞ்சனி — ,, (ஓம்) 2

கலைதரு பூரணி — ,,
கதிதரு மாரணி — ,,
சிலையுடை நாயகி — ,,
செல்வ சியாமளி — ,, (ஓம்) 3

குங்கும சந்தன ஓம் சிவ சக்தி ஓம்
குமுத நிறந்திகழ் ,,
மங்கள நாயகி ,,
மலைதரு மகளே ,, (ஓம்) 4

அருணிதி தருவாய் ,,
அடியரைக் காப்பாய் ,,
சரணம் சரணம் ,,
தாயே பராசக்தி ,, (ஓம்) 5

## பரம் பொருள்

சண்முக சீலா சங்கரன் பாலா
சக்திப் பரம் பொருளே — முருகா (சக்திப் பரம்)

விண்மயில் வீரா சூர சங்காரா
வேதப் பரம் பொருளே — முருகா (வேதப் பரம்)

சிந்திக்கும் அன்பர்கள் சந்திக்கும் நல்லூர்க்
கந்தப் பரம் பொருளே — முருகா (கந்தப் பரம்)

செந்தமிழ்ச் செல்வம் மந்திரச் செல்வம்
தந்த பரம் பொருளே — முருகா (தந்த பரம்)

காவடிக் கந்தா மாவடிக் கந்தா
காவற் பரம் பொருளே — முருகா (காவற் பரம்)
நாவற்கு மாரா சேவற்கு மரா
ஞானப் பரம் பொருளே — முருகா (ஞானப் பரம்)

கற்பூரச் செல்வா கார்த்திகைச் செல்வா
கருணைப் பரம் பொருளே — முருகா (கருணைப் பரம்)
பர்ப்பதச் செல்விக் கற்பகம் தந்த
பாலப் பரம் பொருளே — முருகா (பாலப் பரம்)

ஆடி வருவாய் ஓடி வருவாய்
ஆதிப் பரம் பொருளே — முருகா (ஆதிப் பரம்)
காடு மணக்கும் கங்கை மணக்கும்
கதிரைப் பரம் பொருளே — முருகா (கதிரைப் பரம்)

உல்லாசக் கந்தா சல்லாபக் கந்தா
உண்மைப் பரம் பொருளே — முருகா (உண்மைப் பரம்)
எல்லாம் அறிந்தாய் எங்கும் நிறைந்தாய்
இன்பப் பரம் பொருளே — முருகா (இன்பப் பரம்)

வள்ளிக் குறத்தி உள்ளத்தைக் கொள்ள
வந்த பரம் பொருளே — முருகா (வந்த பரம்)
வெள்ளிப் பொருப்பில் துள்ளிக் குதிக்கும்
வள்ளற் பரம் பொருளே — முருகா (வள்ளற் பரம்

சந்தனச் சோதி குங்குமச் சோதி
தங்கும் பரம் பொருளே — முருகா (தங்கும் பரம்)
சிந்தனைச் சோதி வந்தனைச் சோதி
சிகரப் பரம் பொருளே — முருகா (சிகரப் பரம்)

ஆறு முகவா பன்னிரு கையா
அன்புப் பரம் பொருளே — முருகா (அன்புப் பரம்)
ஆறு படைமேல் ஏறி நடிக்கும்
அழகுப் பரம் பொருளே — முருகா (அழகுப் பரம்)

ஓம் சரவணபவ ஓம்சிவ குருபர
ஓம்கும ராய நம — முருகா (ஓம்கும ராய நம)
ஓம் சுரபாஸ்கர ஓம்சச்சி தானந்த
ஓம்சிவ சுப்ர மண்யா — முருகா (ஓம் சிவசுப்ர மண்யா)

முருகன் ஆதி-மோகனம்

முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா முருகா முருகா

1 குருவாய் வருவாய்
குமரா முருகா
அருவே உருவே
அறிவே முருகா முருகா

2 கந்தா கதிர்வேல்
கையா முருகா
வந்தாள் பரமன்
மகனே முருகா முருகா

3 ஆடும் மயிலா
ஐயா முருகா
பாடும் தமிழில்
பயில்வாய் முருகா முருகா

4 வரதா மணியே
மாயோன் மருகா
சுரபாஸ் கரனே
சுகமே முருகா முருகா

5 வேங்கை யாகிய
வேடுவ முருகா
பாங்குயர் ஞானப்
பழமே முருகா முருகா

6 அன்பே உமையாள்
அமுதே முருகா
இன்பே எங்கள்
இறைவா முருகா முருகா

7 சச்சிதா னந்தச்
சண்முக முருகா
பச்சைக் குறத்தி
பங்கா முருகா முருகா

8 வான்தெய்வ யானை
மருவும் முருகா
தேன்தினை மாவைத்
தின்னும் முருகா முருகா

9 சரவண பவனே
பிரணவ நாதா
கருணை மிளிரும்
கற்பக முருகா முருகா

10 தவமணிக் குன்றே
சரணம் முருகா
கவலைகள் இல்லாக்
கதிதா முருகா முருகா

## கந்தரலங்காரம்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மை குன்று
மொழிக்குத் துணை முருகாவெனும்
நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்தனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்
செங்கோடன் மயூரமுமே.

## குகமந்திரம்

சக்திக் கனலே சமர்செய் பகையைக்
குத்திக் குமுறும் கொதி வேற்கரனே
தொத்தித் தொடருந் துயருங் களைவாய்
பக்தர்க் கருளும் பரமன் மகனே

பவபந் தனே சிந்துகபற் றொழிக
தவசா தனைசித் திலமைத் தொளிர்க
கவலை கதிர்முன் பனிபோ லழிக
சிவசண் முகனும் செயவேல் முருகா

## திருப்புகழ்

உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுகத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே. 1

இசைந்த ஏறும்கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த மாறன் பதிமிகு கூடலின் உறைவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே. 2

# ஆனந்தக் களிப்பு (பஜனை)

வடிவேல் பிடித்து வரும் முருகா — தெய்வ
வள்ளி குஞ்சரியோடு வந்திடும் முருகா
படையாறு குடிகொண்ட முருகா — வெற்றிப்
பண்பான செஞ்சேவல் கொடிகொண்ட முருகா (வடி)

அருணாசலக் கருணை முருகா — அந்த
அருணகிரி நாதருக்கருள் செய்த முருகா
அரனாரின் குருவான முருகா — இந்த
அண்ட பகிரண்டங்கள் உருவான முருகா. (வடி)

மயிலேறி விளையாடும் முருகா — தினை
வனமோடிக் குறவள்ளி மான்தேடும் முருகா
கயிலேசன் தந்திடும் முருகா — இன்பக்
கார்த்திகைப் பாலுண்ண வந்திடும் முருகா (வடி)

சூரசங் காரவேல் முருகா — மன்னும்
சூதமிகு சோலைவளர் நாதனே முருகா
நாரணன் புகழ்மருக முருகனே — இந்த
நாயேனைக் காக்கவே நீவருக முருகா. (வடி)

சரவணைப் பொய்கை தரும் முருகா — ஞான
சச்சிதானந்த மெனும் நிலைதரும் முருகா
பிரமனைச் சிறையிட்ட முருகா — தேவர்
பெருமூச் சுவிட்ட சிறைவெட்டி விடும்முருகா (வடி)

தமிழ் கேட்ட சிவஞான முருகா — ஆதி
சங்கீத நடமாடும் சிங்கார முருகா
தமியோமைக் காத்திடும் முருகா — பாடும்
தண்ணடியர் நெஞ்சிலே கூத்திடும் முருகா. (வடி)

மில்க் வைற் நீலசோப்
பார் சோப்




ஆச்சரியப்படத்தக்க
முறையில்
சுத்தம் செய்கிறது.

தொலைபேசி 7235 - தந்தி: மில்க் வைற் - யாழ்ப்பாணம்


விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்